# நினைவு நாள்
## நவம்பர் 2

# பரிதிமாற் கலைஞர்

தனித்தமிழ் இயக்கத்தின் முன்னோடி, தமிழறிஞர், பாவலர், நாடக அறிஞர், பன்மொழி அறிஞர், பதிப்பாளர்

தமிழ் மொழிப் பற்றால் சூரியநாராயண சாஸ்திரி எனும் இயற்பெயரை பரிதிமாற் கலைஞர் என தனித்தமிழ் பெயராக மாற்றியவர்.



23 வயதில் கல்லூரியில் கிடைத்த தத்துவத் துறை ஆசிரியர் பணியை ஏற்காமல், மொழி ஆர்வத்தால் தமிழ்த் துறையைத் தேர்வு செய்து திறம்பட பணியாற்றியவர்.

மதுரையில் 1901 ஆம் ஆண்டு நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவ துணையிருந்தவர்.

1902 ஆம் ஆண்டு 'செந்தமிழ்' முதல் இதழில் வெளிவந்த இவரது 'உயர்தனிச் செம்மொழி' எனும் கட்டுரை தமிழ், செம்மொழி அங்கீகாரம் பெற சான்றாவணமாகத் திகழ்ந்தது.

இவரது நினைவைப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசு மதுரை விளாச்சேரியில் இவர் வாழ்ந்த வீட்டை நினைவு இல்லமாக்கி, இவரது நூல்களை நாட்டுடைமை ஆக்கியுள்ளது.

**நான்காம் தமிழ்ச் சங்கம், மதுரை**
**செந்தமிழ்க் கல்லூரி**